# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**IA.No**.795/2018 **in OS. No**.27/2015 **Date**: 11.09.2023

**PW**1-குமார்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் பழைய இரும்பு வியாபாரம் செய்கிறேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. எனக்கு மாத வருமானம் சுமார் 10 ஆயிரம் கிடைக்கும். நான் நிர்மலா கார்டனில் வசிக்கிறேன். எனது பூர்வீகம் மதுரை மாவட்டம், அரசரடி. நான் எடப்பாடி குடி வந்து சுமார் 25 வருடம் இருக்கும். நான் எடப்பாடி வருவதற்கு முன்பு ஈரோட்டில் இடையில் சுமார் 2 வருடம் குடியிருந்தேன். வாதி தாவாவில் கேட்டுள்ள பரிகாரம் பற்றி எனக்கு தெரியாது. நான் தெரிந்து கொண்டே வழக்குக்காக தெரியாது என்று பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி இத்தாவாவை தாக்கல் செய்த விவரம் எனக்கு 4 மாதங்களுக்கு முன்பு தான் தெரியும். ம.சா.ஆ.1 ல் பணம் செலுத்துவோர் என்ற இடத்தில் உள்ள கைரேகை யாருடையது என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். அதில் கதவு எண்ணும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதனால் அந்த ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. நான் 2015 முதல் நிர்மலா கார்டனில் வசிப்பது பொய் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 லும் பணம் செலுத்துவோர் என்ற இடத்தில் உள்ள கைரேகை யாருடையது என்று எழுதப்படவில்லை என்பதால் அதுவும் பொய்யானது என்றால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ள முகவரியில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.4 லும் பணம் செலுத்துவோர் என்ற இடத்தில் உள்ள கைரேகை யாருடையது என்று எழுதப்படவில்லை என்பதால் அதுவும் பொய்யானது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.5 வீட்டின் க.எண் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.6 குடியிருப்பு சான்றிதழில் வட்டாச்சியர் கையொப்பம் இல்லை என்பதால் அது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.7 வழக்கு சொத்துக்கு சம்மந்தம் இல்லை என்பதால் அதுவும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8 குடும்ப அட்டையும் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.9ம் வழக்கு சொத்துக்கு சம்மந்தம் இல்லை என்பதால் அதுவும் செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

Sd/-குமார்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.